சட்டமியற்றும் அவை அமைப்பு பெற்றதாக இருப்பதால், அதை ஒரு தனித் தொகுதிகளாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு—"இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் பேரவையின் நடவடிக்கைகள் கீழ்க் கண்டவாறு தீர்மானிக்கப்பட்டன—

1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் தேதி (வெள்ளிக்கிழமை)—

காலையும், மாலையும் பேரவைக் கூட்டம் இருக்கும். மாலை 4-00 மணி முதல் பேரவைக் கூட்டம்.

ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்.

1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி (சனிக்கிழமை)—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை.

வழக்கம் போல் பேரவை காலை 9-00 மணிக்குக் கூடும்.

இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்."

பின்னர், பிற்பகல் 1-30 மணிக்கு பேரவை ஒத்தி வைக்கப்பெற்றது.

6. அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

3. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் விதிகளில் சிறு திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 14—1—1980 ஆம் தேதியிட்டப்பெற்ற 13-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ் நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

1980 ஜூன் 26]

4. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு அறங்காவலர்கள் குழு விதிகளில் அலுவல் முறைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-அறக்கட்டளை கள் துறையின் 13—8—1979 ஆம் தேதியிடப்பெற்ற 1244-ஆம் எண் அர சாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 47, 48 மற்றும் 49-ஆம் பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரிய (நிலுவைகளை வசூலித்தல்) விதிகளில் உள்ள சில விதிகளை செயலுக்குக் கொண்டு வருவதன் பொருட்டு பொதுப் பணித் துறையின் (மின்சாரம்) 14—3—1979 ஆம் தேதி யிடப்பெற்ற 1464-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மின்சார வாரியச் (நிலுவைகளை வசூலித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1978) 7 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

6. தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை, பாலக்கோடு அங்காடிகளில் சில விளைபொருள்களைச் சேர்ப்பதன் பொருட்டு வேளாண்மைத் துறையில் 26—3—1976 ஆம் தேதியன்று வெளியாகி 14—4—1976 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2, பிரிவு 2, பக்கங்கள் 209-211-ல் (ஆங்கிலத்தில்) வெளியான (2)/வேளாண்மை/1842/76 ஆம் எண் அறிவிப் பில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 19—12—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2292-ஆம் எண் அரசாணையில் வெளி யான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தினைப் பொருத்தமட்டில் பழுத்த மற்றும் பழுக்காத வாழைப்பழங்கள், வாழைக்காய் வறுவல் மற்றும் வாழைப்பழத்தில் தயாரிக்கப்பட்ட மாவு போன்ற வாழைப்பழ பொருட்களை வேளாண்மை உற்பத்திப் பொருட் களாக அறிவிக்கை செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 13-12-1979 ஆம் தேதியிடப்பெற்ற 2249-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. நிலக்கடலை, எள், ஆமணக்கு, பருத்தி, கரும்பு, வெல்லம், மிளகாய், மஞ்சள், நெல், கம்பு, சோளம், கேழ்வரகு ஆகியவற்றினைப் பொருத்த மட்டில் சேலம், ஆத்தூர், நாமக்கல், திருச்செங்கோடு, ராசிபுரம், கொங்கனாபுரம், கொளத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அங்காடிகள் மற்றும் இவ்வங்காடிப் பகுதியினை சுற்றியுள்ள 16 கி.மீ. பகுதிகளை அறிவிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கைச் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 21—12—1974 ஆம் தேதியிடப்பெற்ற 2304-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1953) 23 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 4—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 285 ஆம் எண் அரசாணையில் அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்—எதுவுமில்லை.

இணைப்பு I

(106 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

Honourable Members of the Legislature,

I have immense pleasure in welcoming the Members, who have been returned victorious in the historic General Election, winning the confidence and support of the people.

2. In this test of democracy, the people of Tamil Nadu have given a clear verdict without confusion or fear. I admire their clarity of thought and their demonstration of the understanding of their duties. I express my appreciation for free and peaceful election This Seventh Assembly of Tamil Nadu is the gift by the people of Tamil Nadu for truth, justice and honesty offered to the whole of India. I am proud to see you all, who have been returned with new vigour, winning the confidence of the people after the Sixth Assembly was dissolved within two and a half-year as a repurcussion of the Parliamentary elections.

3. In electing you, the people have discharged their duties; I have no doubt you will discharge your duties properly. People have placed immense trust in you. I am sure you recognise this fact just as I do.